# இந்தியா

## மூன்றாவது உலக திருக்குறள் மாநாடு:

- டெல்லியிலுள்ள சாணக்கியபுரியில் நடைபெற உள்ளது. (2019 செப்டம்பர் 23 மற்றும் 24ல் நடைபெறும்).
- இதை ஆசியாவியல் நிறுவனம் நடத்த உள்ளது.
- கருப்பொருள்: உலக அமைதி, நல்லிணக்கத்திற்காக திருக்குறள் என்ற கருப்பொருளுடன் இம்மாநாடு நடக்க உள்ளது.
- முதல் மாநாடு 2017ல் நாகர்கோவிலிலும், 2வது மாநாடு இங்கிலாந்திலுள்ள ஹோப் பல்கலைக்கழகத்திலும் 2018ல் நடைபெற்றது.

## உடல் உறுப்புதானம்:

- உடல் உறுப்பு தானத்தில் தொடர்ந்த 4வது முறையாக தமிழகம் முதலிடம்
- தமிழக சுகாதரத்துறை அமைச்சர் விஜய்பாஸ்கர்.

## 19வது SAARC மாநாடு:

- பாகிஸ்தானில் நடைபெற உள்ளது.
- SAARC – South Asian Association Of Regional Co-opciation.
- சார்க் தொடங்கப்பட்டது டிசம்பர் 8, 1985. தலைமையகம் நேபாளம்-காத்மண்ட் (தெற்காசிய நாடுகள் பிராந்திய கூட்டமைப்பு).
- 2016ல் சார்க் மாநாடு நடக்கவில்லை (இந்தியா புறகணித்தது).
- 8 உறுப்பு நாடுகளை கொண்டது.
- கடைசி 8வது உறுப்பு நாடாக ஆப்கானிஸ்தான் சேர்ந்தது.
- இதற்கு முன் நேபாளில் நடந்தது.

## டோட்டலைசர் :

- தேர்தலில் வாக்குகளை எண்ணுவதற்கான கருவியாக டோட்டலைசர் என்ற கருவி பயன்படுகிறது.

## ரக்சாஞான் சக்திதிட்டம்:

- இதை பாதுகாப்புத்துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது. அறிவுசார் சொத்துரிமை காப்புரிமையை மேம்படுத்துவது தொடர்பாக இத்திட்டத்தை நிர்மலா சீத்தாராமன் தொடங்கி வைத்தார்.
- இப்புத்தாக்க நடவடிக்கைகளில் DRDO விரைந்து செயல்பட வேண்டும் என அமைச்சர் அறிவுறுத்தினார்.

# நியமனம்

## நிலக்கரிதுறை செயலாளர்:

- மத்திய நிலக்கரித்துறையின் புதிய செயலாளராக சுமந்தா சௌத்ரி பொறுப்பேற்றார்

# விளையாட்டு

## உலககோப்பை ஹாக்கி போட்டி:

- ஒடிஷாவின் புவனேஸ்வரில் தொடங்கியது.
- முதல்நாள் இந்தியா - தென்னாப்பிரிக்கா மோதுகிறது.
- ஹாக்கி தரவரிசையில் இந்தியா 5வது இடம்.

## ஆர்ட்ஸ்டிக் லைஜிம்னாஸ்டிக் உலக கோப்பை போட்டி:

- ஜெர்மனியின் காட்பஸ் நகரில் நடந்த போட்டியில் வால்ட் பிரிவில் தீபா கர்மாகர் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

# சர்வதேசம்

## ஐரோப்பிய நாடுகளின் கவுன்சில் அமைப்பின் தலைமைபொறுப்பு:

- இந்த கவுன்சிலில் தலைமை பொறுப்பேற்க உள்ள நாடு ருமேனியா (ஜனவரி 2019 முதல்).
- ருமேனியா வெளியுறவுத்துறை அமைச்சர் தியோடர் மெலஸ்கானும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜிம் பேச்சுவார்த்தை நடத்தினர், இதில் ருமேனியா, இந்தியா ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் உறுப்பு நாடாக திகழ ஆதரவு தெரிவித்தது.

## G 20 உச்சி மாநாடு:

- இம்மாநாடு அர்ஜென்டினாவில் நடைபெற உள்ளது (நவம்பர் 30- டிசம்பர் 1 வரை)
- இதில் மோடி கலந்து கொண்டார் (கச்சா எண்ணெய், உலக வர்த்தகம் முதலானவற்றை பற்றிய பேச்சு வார்த்தை நடந்தது).

## இன்சைட் ஆய்வுக்கலம்:

- நாசாவின் இன்சைட் ஆய்வுக்கலத்தை அமெரிக்கா அனுப்பியுள்ளது. இது செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்யும், தற்போது செவ்வாயில் தரையிரங்கியது.

## 100 எஃப் 35 விமானங்கள்:

- ரேடார் கண்களுக்கு புலப்படாத 100 எஃப் 25 ரக போர் விமானங்களை அமெரிக்காவிடமிருந்து, ஜாப்பான் வாங்கி உள்ளது. (சுமார் 850 $ mn)

## பிஜி தேர்தல்:

- 2018 பொதுத் தேர்தலில் ஆளும்கட்சியான பிஜிமுதல் கட்சி வெற்றிபெற்று "வொரெக் பயினிமராமா" இரண்டாவதாக முறையாக பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- பிஜி நாட்டின் அதிபர் மேஜர் ஜெனரல் ஜியோஜி கொன்ரோடி ஆவார்.

# முக்கியதினம்

## நவம்பர் 26:

- தேசியபால் தினம்.
- உலகளவில் பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- வெள்ளைப் புரட்சியின் தந்தை "வர்கிஸ் குரியன்".